# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5010 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண். 7/2022 நாள் 26.01.2022

### அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கான சாதாரணத் தேர்தல்கள் தேர்தல் அட்டவணை வெளியீடு

மாண்பமை உச்ச நீதிமன்றம் M.A.No. 1404/2021 in M.A. 821/2021 in W.P. (Civil) No. 1443/2019 வழக்கில் 27.9.2021 அன்று வழங்கிய ஆணையில் நான்கு மாதங்களில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்களை நடத்தி முடித்திட தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சென்னை உட்பட 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் என தமிழ்நாட்டில் உள்ள 649 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வார்டுகள் மறுவரையறை செய்யப்பட்டவாறு ஒரே கட்டமாகத் தேர்தலை நடத்திட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அனைத்து தேர்தல் முன்னேற்பாடு பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

வார்டு மறுவரையறை செய்யப்பட்ட அறிவிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வாக்குச்சாவடி பட்டியல்கள் 09.11.2021 மற்றும் 04.01.2022 அன்றும், வாக்காளர் பட்டியல்கள் 09.12.2021 மற்றும் 10.01.2022 அன்றும் வெளியிடப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, தேர்தல் அறிவிக்கையினை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் 28.01.2022 அன்று வெளியிடும். வேட்பு மனு தாக்கல் 28.1.2022 (வெள்ளிக்கிழமை) அன்றே துவங்கும். வேட்பு மனுக்கள் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பெறப்படும். வாக்குப்பதிவு 19.02.2022 (சனிக்கிழமை) அன்று காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும். கடைசி ஒரு மணி நேரம் அதாவது மாலை 5.00 மணி முதல் 6.00 மணி வரை கோவிட்-19 அறிகுறி உள்ளவர்கள் மற்றும் பாதிப்புக்கு உள்ளானவர்கள் மட்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர். வாக்கு

UTL MEDIA

எண்ணிக்கை 22.02.2022 (செவ்வாய்க்கிழமை) அன்று காலை 8.00 மணிக்கு தொடங்கும்.

கோவிட்-19 பெருந்தொற்று தொடர்பான நிலையான இயக்கு செயல்முறைகளை பின்பற்றி சமூக இடைவெளி மற்றும் பெருந்தொற்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்திட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

## தேர்தல் அட்டவணை

UTL MEDIA

| | |
|---|---|
| 1. தேர்தல் அறிவிப்பு பிரசுரித்தல் மற்றும் வேட்பு மனுக்கள் பெறுதல் | 28.01.2022 (வெள்ளிக்கிழமை) |
| 2. வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் | 04.02.2022 (வெள்ளிக்கிழமை) |
| 3. வேட்பு மனுக்களை ஆய்வு செய்தல் | 05.02.2022 (சனிக்கிழமை) |
| 4. வேட்பு மனுக்களை திரும்பப் பெறுதல் | 07.02.2022 (திங்கட்கிழமை) |
| 5. வாக்குப்பதிவு நடைபெறும் நாள் | 19.02.2022 (சனிக்கிழமை) |
| 6. வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் | 22.02.2022 (செவ்வாய்க்கிழமை) |
| 7. தேர்தல் நடவடிக்கைகள் முடிவு பெறும் நாள் | 24.02.2022 (வியாழக்கிழமை) |
| 8. தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்களின் முதல் கூட்டம் மற்றும் பதவி ஏற்பு நாள் | 02.03.2022 (புதன்கிழமை) |
| 9. மறைமுகத் தேர்தல்கள் மூலம் மாநகராட்சிகளுக்கான மேயர் மற்றும் துணை மேயர், நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கான தலைவர் மற்றும் துணை தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்ட நாள் | 04.03.2022 (வெள்ளிக்கிழமை) |

வேட்புமனுக்கள் தாக்கல் செய்தல், வேட்புமனுக்களை ஆய்வு செய்தல், வேட்புமனுக்களை திரும்பப் பெறுதல் மற்றும் சின்னங்கள் ஒதுக்கீடு செய்தல் ஆகிய நிகழ்வுகளை கண்காணிப்புக் கேமரா (CCTV) மூலம் பதிவு செய்திட ஆணையத்தால் மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு உரிய ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

<u>நேரடித் தேர்தல்கள் நடைபெற உள்ள பதவியிடங்கள்</u>

- 21 மாநகராட்சிகளுக்கு உட்பட்ட 1,374 வார்டு உறுப்பினர் பதவியிடங்களும்,
- 138 நகராட்சிகளுக்கு உட்பட்ட 3,843 வார்டு உறுப்பினர் பதவியிடங்களும்
- 490 பேரூராட்சிகளுக்கு உட்பட்ட 7,621 வார்டு உறுப்பினர் பதவியிடங்களும்

என மொத்தம் 12,838 பதவியிடங்களுக்கான நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.

மாநகராட்சி மன்ற உறுப்பினர், நகராட்சி மன்ற உறுப்பினர் மற்றும் பேரூராட்சி வார்டு உறுப்பினர் ஆகிய அனைத்து பதவியிடங்களுக்கான தேர்தல்கள் கட்சி அடிப்படையில் நடைபெறும்.

<u>கோவிட்-19 பெருந்தொற்று தடுப்பு நடவடிக்கை</u>

கோவிட்-19 பெருந்தொற்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களை நடத்திட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மற்றும் பொது சுகாதாரம், நோய் தடுப்பு மருந்து இயக்ககம் ஆகியவற்றுடன் ஆலோசித்து உள்ளாட்சித் தேர்தலின்போது கடைபிடிக்கப்பட வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளை 10.12.2021 அன்று தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. மேலும், இந்தியத் தேர்தல் ஆணையம் தற்போது வெளியிட்டுள்ள கூடுதல் வழிகாட்டு நெறிமுறைகளையும் பின்பற்றி நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களை நடத்திட 25.1.2022 அன்று கூடுதல் அறிவுரைகளையும் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் கீழ்க்கண்ட 13 பொருட்களை அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் வழங்கிட தக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

வெப்பமானி (Thermometer), கை சுத்திகரிப்பான் (hand sanitizer), முகக்கவசம் (face shield), முகமூடி (face mask), கை உறைகள் (rubber gloves), பிபிஇ கிட்ஸ் (PPE kits), டி-கட் பேக்ஸ் (D-cut bags), வாக்காளர்களுக்கான கையுறைகள் (polyethylene hand gloves), பிரவுன் டேப் (brown tape), பஞ்சு (cartons) மற்றும் குப்பை வாளிகள் (dustbins/buckets) போன்றவை மாவட்ட அளவில் கொள்முதல் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<u>வாக்குச்சாவடிகள்</u>

நடைபெறவுள்ள இத்தேர்தல்களுக்கென மாநகராட்சிகளில் 15,158 வாக்குச்சாவடிகளும், நகராட்சிகளில் 7,417 வாக்குச்சாவடிகளும், பேரூராட்சிகளில் 8,454

UTL MEDIA

வாக்குச்சாவடிகளும் என மொத்தம் 31,029 வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெறும். சென்னை மாநகராட்சியில் மட்டும் 5,794 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

**மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள்**

மாற்றுத் திறனாளிகள் எளிதாக வாக்களிப்பதற்கு ஏதுவாக வாக்குச்சாவடிகளில் சாய்வு தளம் (Ramp), சக்கர நாற்காலி (wheel chair) மற்றும் துணையாள் (helper) ஆகிய முன்னேற்பாடுகள் செய்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**வாக்காளர்கள்**

நடப்பு சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியலில் உள்ள அடிப்படை விவரங்களை (data base) கொண்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியல்களை தேசிய தகவலியல் மையத்துடன் இணைந்து online முறையில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியலைத் தயாரித்துள்ளது.

UTL MEDIA

- இத்தேர்தலில் 1,37,06,793 ஆண் வாக்காளர்களும், 1,42,45,637 பெண் வாக்காளர்களும், 4,324 மூன்றாம் பாலின வாக்காளர்களும் என மொத்தம் 2,79,56,754 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

- இதில் மாநகராட்சிகளில் 76,39,538 ஆண் வாக்காளர்களும் 78,42,109 பெண் வாக்காளர்களும், 2,960 மூன்றாம் பாலின வாக்காளர்களும் என மொத்தம் 1,54,84,607 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

- நகராட்சிகளில் 31,51,528 ஆண் வாக்காளர்களும், 33,40,346 பெண் வாக்காளர்களும், 861 மூன்றாம் பாலின வாக்காளர்களும் என மொத்தம் 64,92,735 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

- பேரூராட்சிகளில் 29,15,727 ஆண் வாக்காளர்களும், 30,63,182 பெண் வாக்காளர்களும், 503 மூன்றாம் பாலின வாக்காளர்களும் என மொத்தம் 59,79,412 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

- சென்னை மாநகராட்சியில் மட்டும் 30,23,803 ஆண் வாக்காளர்களும், 30,93,355 பெண் வாக்காளர்களும், 1,576 மூன்றாம் பாலின வாக்காளர்களும் என மொத்தம் 61,18,734 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

**<u>தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் விவரம்</u>**

- இத்தேர்தல்களுக்கென 649 தேர்தல் நடத்தும் அலுவலர்களும், 1,644 உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- இத்தேர்தல்களுக்கென சுமார் 80,000 காவலர்கள் காவல் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.
- ஒரு வாக்குச்சாவடிக்கு 4 வாக்குப்பதிவு அலுவலர்கள் வீதம் சுமார் 1.33 இலட்சம் அலுவலர்கள் வாக்குப்பதிவுப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

**<u>மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்</u>**

மாநகராட்சி/நகராட்சி/பேரூராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கான தேர்தல்கள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மூலம் வாக்குப்பதிவு நடைபெறும். வாக்குப்பதிவிற்கு பயன்படுத்துவதற்காக பாரத மின்னணு நிறுவனத்தினரால் சுமார் 55,337 கட்டுப்பாட்டுக் கருவிகள் (Control unit) மற்றும் 1,06,121 (Ballot unit) வாக்குப்பதிவு கருவிகள் முதல்நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தயார் நிலையில் உள்ளன.

**<u>தேர்தல் பார்வையாளர்கள்</u>**

இத்தேர்தலில் ஒரு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒருவர் என்ற வீதத்தில் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் (IAS Officers) தேர்தல் பார்வையாளர்களாக நியமிக்கப்பட உள்ளனர். இதில் சென்னை மாநகராட்சிக்கு மட்டும் மூன்று தேர்தல் பார்வையாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

மேலும், இணை இயக்குநர்/உதவி இயக்குநர்/துணை ஆட்சியர் நிலையில் பேரூராட்சி/நகராட்சி ஒன்றிற்கு ஓர் அலுவலர் வீதமும், மாநகராட்சியினைப் பொருத்தமட்டில் ஒரு மண்டலத்திற்கு ஓர் அலுவலர் வீதமும் வட்டார தேர்தல் பார்வையாளர்கள் (Block observer) நியமிக்கப்பட உள்ளனர்.

UTL MEDIA

**பொது**

- வேட்பாளர்களின் கல்வித் தகுதி, சொத்து விவரம் மற்றும் குற்றவியல் குறித்த விவரங்களை வாக்காளர்கள் அறிந்து கொள்ளும் வகையில் உறுதிமொழி ஆவணம் (Affidavit) வேட்பாளர்களால் படிவம் 3-A-ல் ரூ. 20/--க்கான முத்திரைத்தாளில் வேட்பு மனுவுடன் சேர்த்து தாக்கல் செய்ய வேண்டும்.

- அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி சார்பாகவும், பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் சார்பாகவும் வேட்பாளர்களை தேர்தல் களத்தில் நிறுத்தும்போது அந்த வேட்பாளர்கள் அவர்களது கட்சியின் சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளர்கள் என்பதற்கு, ஆதாரமாக படிவம் "A" மற்றும் படிவம் "B" ஆகியவற்றைப் பூர்த்தி செய்து தேர்தல் நடத்தும் அலுவலர் / உதவித் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனு திரும்பப் பெறும் நாளன்று பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாகச் சேர்ப்பிக்க வேண்டும். காலம் கடந்து படிவங்கள் பெறப்பட்டால் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் சுயேட்சை வேட்பாளராக மட்டுமே கருதப்படுவார்.

- பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளுக்கு சின்னங்கள் ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

UTL MEDIA

**தேர்தல் வைப்புத் தொகை (Deposits)**

தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்பவர்கள் பின்வருமாறு வைப்புத் தொகை செலுத்த வேண்டும்.

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கான தேர்தல் வைப்புத் தொகை**

| | ரூ. |
|---|---|
| பேரூராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | 500 |
| நகராட்சி மன்ற வார்டு உறுப்பினர் தேர்தல் | 1,000 |
| மாநகராட்சி மன்ற வார்டு உறுப்பினர் தேர்தல் | 2,000 |

**இதர வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கான தேர்தல் வைப்புத் தொகை**

| | ரூ. |
|---|---|
| பேரூராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | 1,000 |
| நகராட்சி மன்ற வார்டு உறுப்பினர் தேர்தல் | 2,000 |
| மாநகராட்சி மன்ற வார்டு உறுப்பினர் தேர்தல் | 4,000 |

**தேர்தல் செலவினங்கள்**

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் செலவினக் கணக்குகளை தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் உரிய அலுவலரிடம் தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்யத் தவறுபவர்கள் மீது தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளாட்சித் தேர்தலில் மூன்று ஆண்டுகளுக்கு போட்டியிட இயலாதவாறு தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள்.

| பதவியிடம் | அதிகபட்ச செலவினம் ரூ. |
|---|---|
| பேரூராட்சி வார்டு உறுப்பினர் | 17,000 |
| நகராட்சி மன்ற வார்டு உறுப்பினர் (முதல் மற்றும் இரண்டாம் நிலை) | 34,000 |
| நகராட்சி மன்ற வார்டு உறுப்பினர் (தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை) | 85,000 |
| மாநகராட்சி மன்ற வார்டு உறுப்பினர் (சென்னை நீங்கலாக) | 85,000 |
| பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற வார்டு உறுப்பினர் | 90,000 |

**பாதுகாப்பு ஏற்பாடுகள்**

- மக்கள் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் வாக்களிக்க ஏதுவாகவும், வாக்குச்சாவடிகள் வாக்குப்பதிவு பொருட்களை பாதுகாப்பாக எடுத்துச் செல்லவும், அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெறுவதை உறுதி செய்திடவும் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- பதட்டம் நிறைந்த வாக்குச்சாவடிகள் அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர்களால் கண்டறியப்பட்டு அதிகபட்ச பாதுகாப்பு ஏற்பாடுகள் அளிக்கப்படுவதோடு, வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடவடிக்கைகளை கண்காணிப்பு கேமிரா (CCTV) / நுண் பார்வையாளர்கள் (micro observer) / இணையதள கண்காணிப்பு (web streaming) ஆகியவற்றின் மூலம் கண்காணிக்கப்பட உள்ளன.

- பதட்டமான வாக்குச்சாவடிகள் web streaming மூலம் கண்காணிக்கவும் அவ்வாறு web stream அமைக்கப்பட இயலாத வாக்குச்சாவடிகள் கண்காணிப்பு கேமரா (CCTV) உடன் மத்திய அரசு நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்களை நுண் பார்வையாளர்களாக (micro observer) நியமித்து கண்காணிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதர அனைத்து வாக்குச்சாவடிகளிலும் CCTV மூலம் கண்காணித்திட உரிய ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணும்

UTL MEDIA

மையங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள Strong room (உட்புறம் மற்றும் வெளிப்புறம்) மற்றும் வாக்கு எண்ணும் கூடங்களில் CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டு வாக்கு எண்ணுகை நடவடிக்கைகளை கண்காணிக்க உரிய ஆணைகள் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ளன.

**மறைமுகத் தேர்தல்கள்**

சாதாரண நேரடித் தேர்தல்கள் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளைக் கொண்டு பின்வரும் பதவியிடங்களுக்கு மறைமுகத் தேர்தல்கள் 04.03.2022 (வெள்ளிக்கிழமை) அன்று நடைபெறும்.

| மறைமுகத் தேர்தலுக்கான பதவியிடங்கள் | பதவியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மாநகராட்சி மன்ற மேயர் பதவியிடங்கள் | 21 |
| மாநகராட்சி மன்ற துணை மேயர் பதவியிடங்கள் | 21 |
| நகராட்சி மன்ற தலைவர் பதவியிடங்கள் | 138 |
| நகராட்சி மன்ற துணைத்தலைவர் பதவியிடங்கள் | 138 |
| பேரூராட்சி மன்ற தலைவர் பதவியிடங்கள் | 490 |
| பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் பதவியிடங்கள் | 490 |
| மொத்தம் | 1,298 |

**தேர்தல் நடத்தை விதிகள்**

தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வருகின்றன. எனவே, அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும், தேர்தல் நடத்தை விதிகள் மற்றும் கோவிட்-19 பெருந்தொற்று தடுப்பு நடவடிக்கை தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, தேர்தல் அமைதியாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் மற்றும் பாதுகாப்பாகவும் நடைபெற எல்லா விதத்திலும் தேர்தல் ஆணையத்தோடு ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

26/1/2022

மக்கள் தொடர்பு அலுவலர்

UTL MEDIA